மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வாடிப்பட்டி, மதுரை மாவட்டம்.

முன்னிலை: திரு.D.ராம்கணேஷ் M.A., M.L.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி.
2021ம் வருடம் மார்ச் மாதம் 08ம் நாள்
சார்வரி ஆண்டு மாசி மாதம் 24 ம் நாள் திங்கட்க்கிழமை

**I.A . No. 644/2020**
**in**
**O.S. No. 06/2020**

1) மலைச்சாமி
2) ராக்கு
3) ராமு
4) முத்துலெட்சுமி
5) சுந்தர்
6) மீனா
7) வினோத்
8) ஆர்த்தி

..... மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

//எதிர்//

போஸ்
தலைமை நிர்வாகி
(ஸ்ரீவெண்ணிமுத்து அய்யனார் கோவில் தலைமை நிர்வாகி)

.... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு 27.11.2020ம் தேதி விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.I. முரளிதரன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் திரு.K. ராமநாதன் அவர்கள் ஆஜராகியும், கடந்த 10.02.2021ம் தேதி இந்நீதிமன்றத்தில் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, இருதரப்பும் கேட்கப்பட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடலான...

**உத்தரவு**

இந்த நிர் மனுவும் மனுதாரர்கள்/பிரதிவாதிகளால், இந்த அசல் வழக்கு O.S. 06/2020ன் பிராதினை உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 7 விதி 11 மற்றும் பிரிவு 151ன்படி, நிராகரிக்க கோரி (Rejection of Plaint) தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்:**

மனுதாரர்கள் அசல் வழக்கின் பிரதிவாதிகள் என்றும், தாவா சொத்தில் அமைந்திருக்கும் ஸ்ரீவெண்ணிமுத்துஅய்யனார் கோவிலுக்கு வெவ்வேறு ஊரிலிருந்து சமூக பங்காளிகள் இணைந்து

வாதி தலைமை நிர்வாகியாக இருந்து இந்த நிர் அசல் வழக்கினை பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்திருப்பதாக பிராதில் குறிப்பிட்டதிலிருந்தே எதிர்மனுதாரர்/வாதி உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 1 விதி 8ன்படி நீதிமன்ற அனுமதி பெறாமல் தாக்கல் செய்திருப்பது சட்டப்படி ஏற்புடையதல்ல என்றும், தாவா சொத்து வாதிக்கு தனிப்பட்டமுறையில் பாத்தியமில்லையென்றும், அசல் வழக்கினை தனிநபராக தாக்கல் செய்யவில்லை என்றும், கோவிலின் தலைமை நிர்வாகியான வாதி மற்றும் 2ம் நிலை பூசாரியான R. அழகர் பெயரில் கோவில் சார்பாக A.V. கருப்புச்சேர்வை என்பவரிடமிருந்து வாக்கராலாக கிரையம் பெற்று பின்னர் அவரது வாரிசுகளிடமிருந்து கிரையம் பெற்றதாக வாதி தனது பிராதில் ஒப்புக்கொண்டுள்ளார். ஆனால் 1993ம் வருடம் முதல் தாவா சொத்து கருப்புச்சேர்வை என்பவருக்கு எவ்வகையில் பாத்தியம் என்பதற்கு ஆதரவாக எவ்வித ஆவணங்களுமின்றி தாவா பிராது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், தாவா பிராதின் VII பாராவில் கோவில் இடத்தை அளந்து வாதி தரப்பினர்களுக்கு ஒப்படைக்க வருவாய் அதிகாரியும் வாடிப்பட்டி காவல்நிலைய அதிகாரியும் பரிந்துரை செய்தார் என குறிப்பிட்டதிலிருந்தே எதிர்மனுதாரர்/வாதி தாவா சொத்தின் அனுபவத்தில் இல்லை என்பதும், தாவா சொத்து தொடர்பாக அளவை, அத்துமால் தொடர்பான உரிமையியல் பிரச்சனை இருந்துள்ளது என்பதும் தெளிவாகிறது என்றும், மேற்படி உண்மைகளை மறைத்து பொய்யான வழக்குமூலத்துடன் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் வாதுரைக்கப்பட்டது. மேலும் தாவா சொத்தினை கோவில் சார்பாக வாதியும் 2ம் நிலை பூசாரியான R. அழகர் என்பவரும் கிரையம் பெற்றதாக பிராதில் குறிப்பிட்டுள்ளதில், 2ம் நிலை பூசாரியான R. அழகர் என்பவரை அசல் வழக்கில் தரப்பினராக சேர்க்காமல் எதிர்மனுதாரர்/வாதி அசல் வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்றும், தாவா சொத்திற்கும் 2 முதல் 8 வரையிலான பிரதிவாதிகளுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லாத நிலையிலும், 2 முதல் 8 பிரதிவாதிகளை பொறுத்து பிராதின் எவ்விடத்திலும் வழக்குமூலம் இல்லாத நிலையிலும், 2 முதல் 8 பிரதிவாதிகளை தேவையற்ற தரப்பினர்களாக சேர்த்து அசல் வழக்கினை எதிர்மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ளதால், எதிர்மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள பிராதினை நிராகரித்து மனுவினை அனுமதிக்கும்படி வாதுரைக்கப்பட்டது.

**<u>2) எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்படும் எதிர் உரையின் சுருக்கம்:</u>**

மனுவில் கண்டுள்ள விபரங்கள் தவறானதாகும். அதனை மனுதாரரே நிரூபணம் செய்யக்கடமைப்பட்டவர் ஆவார். தாவா சொத்து கோவிலுக்கு பாத்தியப்பட்ட சிறு குலவழிபாட்டு ஸ்தலமாகும். மேற்படி கோவிலானது வாதியின் பங்காளிகள் தவிர வேறு எந்த சமூகத்தினருக்கு பாத்தியப்பட்ட கோவில் அல்ல என்றும், மேலும் தாவா கோவிலை நிர்வகிக்க தலைமை நிர்வாகியான வாதியின் பொறுப்பு என்பதால், வாதியால் மட்டும் அசல் வழக்கு தாககல் செய்யப்பட்டுள்ளதாகவும், கோவில் பூசாரி என்பவர் தெய்வங்களுக்கு அர்ச்சனை ஆராதனை

செய்வதற்கு மட்டும் உரிமை உடையவர் ஆவார். தாவா சொத்து A.V. கருப்பு சேர்வை என்பவருக்கு பாத்தியப்பட்டு, அவர் பெயரில் ரசீதுகள் பெற்று அவரது இறப்பிற்கு பின்னர் ஒப்பந்த அடிப்படையில், அவரது வாரிசுகளால் வாடிப்பட்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், மூல ஆவணமின்றி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்ய இயலாது என்பது மனுதாரர்/பிரதிவாதிகளுக்கு நன்கு தெரியும் என்றும், தாவா சொத்து A.V. கருப்புசேர்வைக்கு எவ்வகையில் பாத்தியம் எனக்கோரும் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தாவா சொத்து யாருக்கு பாத்தியப்பட்டது என்பதனை குறிப்பிடவில்லை என்றும், தாவா சொத்து கோவிலுக்கு பாத்தியப்பட்டது என்பதற்கு ஆதரவாக வருவாய்துறை ஆவணங்கள் இருப்பதால், அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், தாவா சொத்தின் அனுபவத்திலும் பொறுப்பிலும் வாதி இருந்து வருவதால் தான் வருவாய் அலுவலர்கள் மூலம் கள ஆய்வு செய்து வாதி மற்றும் பூசாரி அழகர் பெயரிலும் பட்டா கொடுக்கப்பட்டுள்ளதிலிருந்தே தாவா சொத்தானது வாதியின் அனுபவத்தில் இருந்து வருவது தெளிவாகிறது என்றும், தாவா சொத்தினை பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்து கட்டிடம் கட்ட முயற்சித்தால் தான் வாதியால் மனுக்கொடுக்கப்பட்டு வருவாய் அதிகாரிகளால் விசாரணை செய்யப்பட்டு அத்துமால் செய்ய பரிந்துரை செய்யப்பட்டது என்றும், தாவா சொத்து 2015ம் ஆண்டு கிரையம் பெற்ற நாள் முதல் வாதியின் அனுபவத்தில் இருந்து வருவதை பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்ய முயற்சி செய்ததால், 13.11.2019ம் தேதியில் மதுரை நில ஆக்கிரமிப்பு தடுப்பு பிரிவில் புகார் கொடுத்தும், 22.11.2019ம் தேதியில் மதுரை மாவட்ட காவல்துறைகண்காணிப்பாளிரிடம் புகார் மனு கொடுத்து 09.09.2019ம் தேதியில் மாவட்ட ஆட்சியருக்கு புகார் கொடுத்தும் 07.11.2019ம் தேதியில் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் கொலைமிரட்டல் விடுத்ததால் புகார் கொடுத்தும் பிரதிவாதிகள் அதிகார பலத்தை பயன்படுத்தி நடவடிக்கை எடுக்கவிடாமல் தடுத்து விட்டதால் அசல் வழக்கினை பிரதிவாதிகளுக்கு எதிராக சரியான வழக்கு மூலங்களுடன் எதிர்மனுதாரர்/வாதி தாக்கல் செய்ததாகவும், தாவா சொத்திற்கும் பிரதிவாதிகளுக்கும் எவ்வித சம்பந்தமுமில்லாத நிலையில் தாவா சொத்தினை அபகரிக்க வேண்டுமென்ற என்ற எண்ணத்தில் தொடர்ந்து முயற்சித்து வருவதாலே அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டதாகவும், எனவே அசல் வழக்கை கால தாமதம் செய்ய வேண்டுமென்ற எண்ணத்தில் தாக்கல் செய்யப்பட்ட இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென எதிர்வாதம் செய்யப்பட்டது.

3) மனுதாராகள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனு அனுமதிக்கத்தக்கதா என்பதே தீர்வு காண வேண்டியது பொருண்மை ஆகும்.

<u>தீர்வு:-</u>

4) இரு தரப்பு வாதுரைகள் மற்றும் வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்ததில், இந்த நிர்

அசல் வழக்கும் தாவா சொத்தில் பிரதிவாதிகள் எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என பிரதிவாதிகளைக் கட்டுப்படுத்தி நிரந்தர தடையாணை பரிகாரம் மற்றும் செலவு தொகை பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்தானது அருள்மிகு ஸ்ரீவெண்ணிமுத்துஅய்யனார் கோவிலுக்காக வாதி மற்றும் வாதியின் சமூகத்தை சேர்ந்த பங்காளிகள் சார்பாக வாதி மற்றும் R. அழகர் என்பவர் பெயரில் வாங்கப்பட்டதாகவும், தாவா சொத்து மற்றும் மேற்படி திருக்கோவில் நிர்வாகம் வாதியின் கட்டுப்பாட்டிலும், பராமரிப்பிலும் இருந்து வருவதாகவும், அதனடிப்படையில் மேற்படி திருக்கோவில் மற்றும் தாவா சொத்தை பராமரிப்பதற்காக தலைமை நிர்வாகியாக செயல்பட்டு வருவதாகவும் கோரி இந்த நிர் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாவா சொத்தானது ஸ்ரீவெண்ணிமுத்துஅய்யனார் கோவில் சார்பாக அனைத்து பங்காளிகள் சார்பாகவும் வாங்கப்பட்டதாக வாதி தரப்பில் அசல் வழக்கில் வாதுரைத்துள்ளதால், மேற்படி அனைத்து பங்காளிகளையும் வழக்கு தரப்பினர்களாக சேர்க்காமலும், அல்லது அனைத்து பங்காளிகள் சார்பாக வழக்கு தாக்கல் செய்வதற்கு உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 1 விதி 8ன்படி மனு தாக்கல் செய்து அனுமதி பெறாமலும் நேரடியாக அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் அசல் வழக்கு பிராது நிராகரிக்கப்படவேண்டுமென வாதுரைக்கப்பட்டது. ஆனால் வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்யும்போது, அசல் வழக்கு பிராதுடன் 7 ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதுவும் இம்மனுவில் எ.ம.சா.ஆ1 முதல் 7 வரையிலான ஆவணங்களாக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதில் எ.ம.சா.ஆ.1 ஆகிய 04.08.2015ம் தேதியிட்ட கிரைய பத்திரத்தினை பரிசீலனை செய்யும்போது, அதில், “வெண்ணிமுத்து அய்யனார் கோவிலுக்காக மதுரை மாவட்டம், மதுரை வடக்கு வட்டம், சமயநல்லூர் கிராமம், கட்டப்புளி கோவில் தெரு, கதவு எண். 2/192 என்ற விலாசத்தில் வசிக்கும் அழகர்சேர்வை அவர்களின் குமாரரும் மேற்படி கோவில் தற்போது தலைமை நிர்வாகியுமான திரு. A. போஸ்-1, மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், 3 நிர் கச்சைகட்டி கிராமத்தில் உள்ள ஸ்ரீவெண்ணிமுத்து அய்யனார் கோவில் தற்கால இரண்டாம்நிலை பூசாரியும் மதுரை -11 ஜெய்ஹிந்த்புரம், பாரதியார் ரோடு, கதவு எண் 142 என்ற விலாசத்தில் வசிக்கும் திரு. A. ராஜா அவர்களின் குமாரருமான திரு. R. அழகர்-2 உங்கள் இருவரின் மூலம் மேற்படி ஸ்ரீ வெண்ணிமுத்து அய்யனார் கோவிலுக்கு” எனக்குறிப்பிட்டு பத்திரம் பதிவு செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. மேலும் ம.சா.ஆ.2 ஆவணமாகிய பட்டா எண். 1687ன்படியான மனைவாரி தோராயபட்டாவில் ஸ்ரீவெண்ணிமுத்து அய்யனார் கோவிலுக்காக அதன் தற்போதைய தலைமை நிர்வாகி போஸ் (1) தற்போதைய இரண்டாம் நிலை பூசாரி அழகர்(2) என்ற பெயர்களில் தாவா சொத்திற்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது தெரியவருகிறது. அதன்படி ஸ்ரீவெண்ணிமுத்து அய்யனார் கோவில் பங்காளிகள் அனைவரின் சார்பாக வாதி தலைமை நிர்வாகியாக ஏற்கனவே நியமனம் செய்யப்பட்டுள்ள விபரம் தெரியவருகிறது. எனவே மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில்

குறிப்பிடப்பட்டுள்ள உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 1 விதி 8ன்படி மனு தாக்கல் செய்யப்படுவதற்கான அவசியம் ஏற்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

(5) மேலும் தாவா சொத்தானது A.V. கருப்புச்சேர்வை என்பதற்கு பாத்தியமானது என்பதற்கு எவ்வித சான்றாவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை என மனுவில் மனுதாரர்கள் தரப்பில் வாதுரைக்கப்பட்டது. அதேபோல், எ.ம.சா.ஆ.1 ஆவணம் A.V. கருப்புச்சேர்வை வாரிசுகளால் கிரையம் பதிவு செய்து கொடுக்கப்பட்டுள்ளதாக தாக்கல் செய்யப்பட்டுள்ளதில், மேற்படி கருப்புசேர்வை வாரிசுகளுக்கு தாவா சொத்து எவ்வகையில் பாத்தியமானது என்பதற்கு ஆதரவாக எவ்வித ஆவணங்களும் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை என வாதுரைக்கப்பட்டது. ஆனால் மேற்படி பொருண்மைகள் அனைத்தும் அசல் வழக்கு விசாரணையில் இருதரப்பு சாட்சிய சான்றாவணங்களின் அடிப்படையில் மட்டுமே தீர்வு காண இயலும் என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

(6) மேலும் அசல் வழக்கில் பிராதில் வாதியானவர் மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுத்து அதன் பேரில் தாவா சொத்தானது அத்துமால் அளந்து ஒப்படைக்க வட்டாட்சியரால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக வாதுரைக்கப்பட்டுள்ளதிலிருந்து வழக்கு தாக்கல் செய்யப்பட்ட காலத்திலிருந்து தாவா சொத்தானது வாதியின் அனுபவத்தில் இருந்து வரவில்லை எனவும், எனவே வாதி அனுபவத்தில் இருந்து வராத நிலையில், நிரந்தர தடையாணை பரிகாரம் கோரி அதனடிப்படையில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் பிராது நிராகரிக்கப்படவேண்டுமென வாதுரைக்கப்பட்டது. அதற்கு ஆதரவாக அடியிற்கண்ட முன்தீர்ப்புகள் சுட்டிக்காட்டப்பட்டன.

1) 2011(1) MWN (Civil) 113 M.V. Jayavelu (v) E. Umapathy case

2) 2018(3) MWN (Civil) 190 P. Srikanth (v) R. Venkatesan and others case

ஆனால் எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாவா சொத்தில் வாதி தொடர்ந்து அனுபவத்தில் இருந்து வருகின்ற நிலையில், பிரதிவாதிகள் அத்துமீறி நுழைந்து ஆக்கிரமிப்பு செய்ய முயற்சி செய்ததால், மாவட்ட ஆட்சியரிடம் மனுக்கொடுத்து அதன் பேரில் வட்டாட்சியரின் உத்தரவின் பேரில் வருவாய்துறை அலுவலர்களால் தாவா சொத்தினை அளவீடு செய்ய உத்தரவிடப்பட்டுள்ளதே தவிர அதன் அடிப்படையில் வாதி தாவா சொத்தின் அனுபவத்தில் இருந்து வரவில்லை என மனுதாரர்கள் மனுவில் குறிப்பிட்டுள்ளது ஏற்கத்தக்கதல்ல என எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது. ஆனால் மேற்படி பொருண்மை தொடர்பாக அசல் வழக்கு விசாரணையிலே தீர்வு காண இயலும் என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

(7) மேலும் தாவா சொத்தானது A.V. கருப்புச்சேர்வை மற்றும் அவரது வாரிசுகளுக்கு பாத்தியமானதாகி தொடர்ச்சியாக தாவா சொத்தானது வாதியின் அனுபவத்தில் இருந்து வந்துள்ளதா என்பதை அசல் வழக்கின் விசாரணையில் மட்டுமே தீர்வு காண இயலும் என்றும்,

உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 7 விதி 11ன்படியான மனுவில் தீர்வு காண இயலாது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

(8) அதேபோல தாவா சொத்திற்கு உரிமை பாத்தியம் தொடர்பாக பிரச்சனை ஏற்பட்டுள்ள நிலையில், தாவா சொத்து தொடர்பாக விளம்புகை பரிகாரம் கோராமல் நிரந்தர தடையாணை பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வாதுரைக்கப்பட்டது. ஆனால் அசல் வழக்கு பிராதானது நிராகரிக்கப்படுவது தொடர்பாக உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 7 விதி 11ல் அடியிற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

**Order 7 Rule 11**

**11. Rejection of plaint.** - The plaint shall be rejected in the following cases:-

(a) where it does not disclose a cause of action;

(b) where the relief claimed is under-valued, and the plaintiff, on being required by the Court to so correct the valuation within a time to be fixed by the Court, fails to do so;

(c) where the relief claimed is properly valued but the plaint is written upon paper insufficiently stamped, and the plaintiff, on being required by the court to supply the requisite stamp-paper within a time to be fixed by the Court, fails to do so;

(d) where the suit appears from the statement in the plaint to be barred by any lay;

*69(e) where it is not filed in duplicate;*

*69a(f) where the plaintiff fails to comply with the provisions of rule 9.]]*

70[Provided that the time fixed by the Court for the correction of the valuation or supplying of the requisite stamp-papers shall not be extended unless the Court, for reasons to be recorded, is satisfied that the plaintiff was prevented by any cause of an exceptional nature from correcting the valuation or supplying the requisite stamp-paper, as the case may be within the time fixed by the Court and the refusal to extend such time would cause grave injustice to the plaintiff.]

அதன்படி மனுப்பரிகாரத்திற்கு குறிப்பிட்டுள்ள காரணங்கள் மேற்படி சட்ட வரையறைக்குள் உள்ளடங்கி வரவில்லை என்பது தெரியவருகிறது. எனவே மேற்படி மனுப்பரிகாரமானது சட்டப்படியோ பொருண்மைப்படியோ ஏற்கத்தக்கதல்ல என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

(9) மேலும் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் எ.ம.சா.ஆ.1ன்படி வாதி மற்றும் 2ம் நிலை பூசாரியான R. அழகர் பெயரில் கிரைய பத்திரம் பதிவு செய்யப்பட்டுள்ளதும், எ.ம.சா.ஆ.2ன்படி வாதி மற்றும் R. அழகர் என்பவர் பெயரில் கூட்டாக பட்டா வழங்கப்பட்டுள்ளதால், மேற்படி அழகர்

என்பவரை வழக்கு தரப்பினராக சேர்க்காமல் அசல் வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், அவசிய தரப்பினரை சேர்க்காத குறைபாட்டிற்கு உள்ளாகியுள்ளதாகவும், அதேபோல அசல் வழக்கில் 2 முதல் 8 பிரதிவாதிகளை பொறுத்து எவ்வித வழக்குமூலமும் ஏற்படாத நிலையில், 2 முதல் 8 பிரதிவாதிகள் அசல் வழக்கில் அவசியமற்ற தரப்பினர்கள் என்பதால், அசல் வழக்கு அவசியமற்ற தரப்பினர்களை சேர்த்த குறைபாட்டிற்கு உள்ளாகியுள்ளதாகவும் வாதுரைக்கப்பட்டது. ஆனால் மேற்படி அவசிய தரப்பினரை சேர்ப்பது மற்றும் சேர்க்காத குறைபாடு தொடர்பாக உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 7 விதி 11ன் கீழ் அசல் வழக்கினை நிராகரிக்க இயலாது என்பது சட்ட நிலைப்பாடு ஆகும்.

எனவே மேற்கண்ட அசல் வழக்கு பிராது மற்றும் அதனுடன் இணைந்த ஆவணங்களின்படியும், மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு வாதுரைகளின்படியும் மனுதாரர்கள் கோரும் இம்மனு பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கக்கூடியதில்லை என தீர்வு காணப்படுகிறது.

இறுதியாக இம்மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவு தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு அவரால் கணிணியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்ட பின்னர் 2021ம் ஆண்டு மார்ச் மாதம் 08ஆம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

(ஓம்.D.ராம்கணேஷ்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.

**மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் :** இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்**

எ.ம.சா.ஆ.1 - 04.08.2015ம் தேதியிட்ட கிரைய ஆவணம் அசல்
எ.ம.சா.ஆ.2 - 02.09.2019ம் தேதியிட்ட பட்டா அசல்
எ.ம.சா.ஆ.3 - 22.11.2019ம் தேதியிட்ட புகார் மனு நகல்
எ.ம.சா.ஆ.4 - ஒப்புதல் அட்டை அசல்
எ.ம.சா.ஆ.5 - 13.11.2019ம் தேதியிட்ட புகார் மனு நகல்
எ.ம.சா.ஆ.6 - ஒப்புதல் அட்டை அசல்
எ.ம.சா.ஆ.7 - வாதியின் ஆதார் அட்டை நகல்

(ஓம்.D.ராம்கணேஷ்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.

//உண்மை நகல்//